திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தத் திட்டம்பற்றித் தென் மண்டலக் குழுவின் மூலம் ஆலோசனை செய்யப்படுகிறதா ? அல்லது இந்த அரசாங்க மன்றத்தின் மூலம் ஆலோசனை செய்யப் படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தென்மண்டலக் குழுவில் ஒரு முறை இது வெளியிடப்பட்டது, விவாதிக்கப்படவில்லை. விவரங்களை நேரடியாக இரண்டு ராஜ்யங்களும் கலந்து பேசி அறியலாமே தவிர தென் மண்டலக் குழுவிலுள்ள மற்றச் சிலரும் பேசி இதில் குழப்பம் உண்டாவதைத் தவிர்க்க, இந்த அரசாங்கம் கவனித்து வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : மைசூர் முதலமைச்சர் அவர்கள், இந்த ஹோகனக்கல் திட்டத்திற்குப் பதிலாக வேறு மூன்று இடங்களில் காவிரி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டி, இந்த ஹோகனக்கல் திட்டத்திற்கும் அதிகமான அளவில் மின்சாரம் தயாரிக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதிகாரப் பூர்வமான எந்த விதக் கருத்தும் எங்களுக்குக் கிடைக்கவில்லை.

திரு. வை. சங்கரன் : இது பற்றி டில்லியிலே சந்திக்கும்பொழுது பேச்சுவார்த்தை நடத்திக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுபோன்ற காரணங்களால்தான் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இதற்கென்று பிரத்தியேக மாகத் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இரண்டு பேர்களுடைய சம்மதமும் வேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தத் திட்டத்தின்படி, நமது அரசாங்கம் பாதியும், மைசூர் அரசாங்கம் பாதித் தொகையும் போட்டு, மின்சாரத்தைப் பங்கிட்டுக்கொள்வது என்பதுதான் திட்டமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைப்பற்றிய விவரங்களைச் சொல்வதற்கு இப்பொழுது இயலாது.

புதுக்கோட்டையில் பலதிறத் தொழிற்பயிற்சி நிலையம்

* 361 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி தெற்கு மாவட்ட வளர்ச்சி கவுன்சில் மூலம் புதுக்கோட்டையில் பாலிடெக்னிக் அமைக்க வேண்டும் என்று கோரிய தீர்மானம் அரசினருக்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

29th March 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறுவ வேண்டிய பாலிடெக்னிக்குகள் அனைத்தும் ஏற்கெனவே நிறுவப்பட்டு விட்டன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் புதிதாகப் பாலிடெக்னிக்குகளை நிறுவுவதற்கான திட்டங்கள் வகுக்கப்படும் போது புதுக்கோட்டையில் தேவைகள் அதன் தகுதிக்கேற்ப ஆலோசிக்கப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலிடெக்னிக்குகள் அமைக்கப்படுகின்றபொழுது எந்த அடிப்படையில் அமைக்கப்பட வேண்டுமென்று முயற்சியெடுத்துக் கொள்ளப்பட்டு அமைக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொதுவாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு பாலிடெக்னிக் இருக்க வேண்டுமென்பது தான் கொள்கை. ஒரு பாலிடெக்னிக்குக்கு மேலும் ஏற்படுத்த வேண்டுமென்றால் அங்கேயிருக்கிற, இண்டஸ்ட்ரீஸ், தொழிலாளர் கள், பணியாளர்கள் இவையெல்லாம் பார்த்துத்தான் அமைக்க வேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பொதுவாக, பாலிடெக்னிக்குகள் வைப்பது, அதிகமாக ஒர்க்ஷாப், இன்ஜினியரிங் தொழில்கள் இருக்கின்ற இடங்களில்தான் வைக்க வேண்டும். ஆனால் சர்க்கார் அந்த மாதிரி இடங்களையெல்லாம் விட்டு விடுகிறது. தொழிற் சாலைகள் இல்லாத பகுதிகளிலேயே பாலிடெக்னிக்குகள் வைக்கி றார்கள். ஆகையால், இனிமேலாவது, பாலிடெக்னிக்குகள் வைக்கிற நேரத்திலே என்ஜினியரிங் தொழில்கள், தொழிற் சாலைகள் அதிகமாக இருக்கும் இடங்களில் வைக்க வேண்டுமென்று முயற்சி செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழிற்சாலை இருக்கிற எந்தப் பகுதியிலே பாலிடெக்னிக் வைக்கவில்லையென்று கனம் உறுப்பினர் சொல்வார்களேயானால் அது உபயோகமாக இருக்கும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலத்தில் எத்தனை பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்க வேண்டுமென்று உத்தேசம் இருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முடிவுகள் இன்னும் எடுக்கப் படவில்லை. சுமாராக ஏழு இடங்களில் வைக்கலாம் என்று அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

திருமதி சி. குழந்தையம்மாள் : கோயம்புத்தூர் ஜில்லாவிலே பெண்களுக்கென்று ஒரு பாலிடெக்னிக் அமைக்க வேண்டுமென்று தனியார் முயன்றபொழுது, அமைச்சர் அவர்கள், அரசாங்கமே அதைச் செய்யப் போவதாகக் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு அது நடைமுறையிலே கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாலிடெக்னிக் ஆரம்பித்தாகிவிட்டது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : பாலிடெக்னிக் வைப்பதற்கு விருப்பம் தெரிவித்துத் தனியார்களிடமிருந்து வந்த விண்ணப்பங்கள் எவ்வளவு ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முன்பெல்லாம் பாலிடெக்னிக் ஆரம்பிப்பது என்ருல் செலவு குறைவாக ஆகும். அதுவுமில்லாமல் தனியார் கொடுக்கவேண்டிய தொகையும் மிகக் குறைவாக இருந்தது. அதாவது மூன்றில் ஒரு பங்கு கொடுத்தால் போதும் என்று இருந்தது. இப்பொழுது, ஆரம்பிக்கவேண்டுமென்ருல் செலவும் மிக அதிகமாக ஆகிறது. ஆகவே, தனியார் கொடுக்க வேண்டிய தொகையும் அதிகமாக இருக்கிறது. ஆகையிஞல் தனியாரிடமிருந்து அதிகமாக விண்ணப்பங்கள் வருவதில்லே.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : பெண்களுக்காக அமைக்கப்பட்ட பாலிடெக்னிக்குகளில் ஸ்டைஃபண்டு கொடுக்கப்படும் பொழுது எல்லாப் பிள்ளேகளுக்கும் கொடுக்கப்படுவதில்லே. ஒரு சிலருக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, எல்லோருக்கும் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிதி வசதியிருந்தால் எல்லாப் பிள்ளேகளுக்கும் கொடுக்க முடியும். இப்பொழுதுள்ள நிதி வசதியின்படி சிலருக்குத்தான் கொடுக்கிருேம். ஆண்கள் பாலிடெக்னிக்குகளிலே எந்த அடைப்படையிலே கொடுக்கப்பட்டு வருகிறதோ அதே அடிப்படையிலேதான் பெண்கள் பாலிடெக்னிக்குகளிலும் கொடுக்கிருேம்.

திருமதி சி. குழந்தையம்மாள் : பெண்களுக்கென்று நடத்தப்படுகின்ற பாலிடெக்னிக்குகள் மிகக் குறைந்த அளவில் இருக்கிறது. ஆண்கள் பாலிடெக்னிக்குகள் விரிவாக நடந்து வருவதுபோல் இந்தப் பெண்கள் பாலிடெக்னிக்குகளேயும் விரிவாக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஆரம்பம்தான். ஆரம்பத்திலேயே விரிவாக்க முடியாது. படிப்படியாக விஸ்தரிக்கப்படும்.

திரு. ஆ. துரையரசன் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பிக்கப்படுகிற பாலிடெக்னிக்குகளில் அமைச்சர் அவர்கள் தங்களுடைய சொந்த மாவட்டமாகிய தஞ்சை மாவட்டத்தில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தஞ்சையிலே வைக்கலாமா வேண்டாமா என்று பரிசீலனேயில் இருக்கிறது. சொந்த மாவட்டம் என்பதற்காகப் பரிசீலிக்கப்படுவதில்லே.

29th March 1965]

திரு. டி. கார்ச்சா கவுடர் : பாலிடெக்னிக்குகளில் எந்தெந்தப் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. சாப்பாட்டு டெக்னிக்கும் சொல்லிக் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது எலக்டிரானிக்ஸ், சிவில் டிராயிங் டிராப்ட்ஸ்மேன் போன்ற பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இந்தச் சமையல் கலைக்காகத் தனியாக சென்னை ராஜ்யத்தில் காலேஜ் வைத்திருக்கிறோம். கிண்டியில் காலேஜ் ஆப் கேட்டரிங் டெக்னாலஜி அண்ட் அப்ளைட் நியூட்ரிஷன் என்ற ஸ்தாபனம் வேலை செய்து வருகிறது.

திருமதி சி. குழந்தை அம்மாள் : தலைவர் அவர்களே, இப்போது பாலிடெக்னிக்குகளுக்குப் போகக் கூடிய பெண்களுக்கு என்ஜினிரிங் வொர்க் ஷாப்பில் வேலை செய்யக் கூடிய பயிற்சி, அந்தத் தொழில்களுக்குத் தேவைப்படுகிற என்ஜினியரிங் சாமான்களைத் தயார் செய்து கொடுக்கக் கூடிய பயிற்சி அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது அங்கே மெக்கானிகல் பயிற்சி கொடுக்கவில்லை, எலெக்ட்ரானிக், ரேடியோ அசெம்பிள் செய்வது, எலெக்ட்ரானிக் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் செய்வது, டெலி பிரின்டர்ஸ் பொருத்துவது—இந்தவிதமான பயிற்சி கொடுக்கப்படுகிறது. இன்னும் சிவில் டிராப்ட்ஸ்மென்—டிராயிங் போடுவது பயிற்சி கொடுக்கப்படுகிறது.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : சார், திண்டுக்கல்லில் பாலிடெக்னிக் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்னும் முடிவு எடுக்கவில்லை.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : சென்ற ஆண்டு மதுரையில் பாலிடெக்னிக் ஆரம்பித்தபோது இருக்க இடவசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு ஹாஸ்டல் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எல்லா வசதிகளும் செய்து கொண்டு ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிப்பது என்றால் காலதாமதமாகிவிடும். இருக்கக் கூடிய வசதிகளைக் கொண்டு ஆரம்பித்து விடுகிறோம். போகப்போக எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. கணேசன் : சமையல் கலைக் கல்லூரி என்பது யாரை வைத்து, எந்த முறையில் கற்றுக் கொடுக்கப்படுகிறது ? அதன் மூலமாக குடும்பங்களுக்குப் பயன்படுகிற வகையில் சமையல் சொல்லிக் கொடுக்கப்படுகிறதா ? அல்லது சமையலைப் பற்றி பிறருக்குக் கற்றுக்கொடுப்பதற்கான ஆசிரியர் பயிற்சியை அளிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் காடரிங் டெகனலஜி காலேஜை சென்று பார்த்து வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சமையல் என்ருல்—டூரிஸ்ட் ஹோட்டல்ஸ், கான்டீன், ஹாஸ்பிடல்ஸ் ஆகிய இவைகள் எல்லாவற்றுக்கும் தகுந்தாற்போல வசதி கொடுக்கப்படுகிறது.

திரு. சா. கணேசன் : அந்த முறை குடும்பங்களுக்குப் பயன் படக்கூடிய முறையில் அமைந்திருக்கிறதா? அல்லது குடும்பங் களுடைய வருவாய்க்கும், இவர்களுக்குக் கொடுத்துள்ள பயிற்சி யினுல் ஏற்படுகிற செலவுக்கும் பொருத்தமில்லாமல் தாறுமாருகப் போகக் கூடிய வகையில் அமைந்துவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதில் இரண்டுவிதமான பயிற்சி அளிக்கப்படுகிறது. டிப்ளமா லெவலில் ஒருவித பயிற்சி. லைசென்ஷியேடெட் கோர்ஸ்—சர்டிபிகேட் வழங்கும் முறையில் பழங்கள் பதனிடுவது, கேக்குகள் முதலியவைகளைக் குறுகிய காலத்தில் செய்வது ஆகியவை கற்றுக் கொடுக்கப்படுகிறது.

MR. SPEAKER : I think that in Chettinad there are experts in cooking. (Laughter).

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தஞ்சை ஜில்லாவில் பூண்டி யில் வாண்டையார் பாலிடெக்னிக் வைக்க அனுமதி கேட்டிருந் தாரே, அது கொடுக்கப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதை அவர்கள் வாபஸ் பெற்று விட்டார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சர்க்கார் நான்காவது ஐந் தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு பாலிடெக்னிக்குகள், எங்கெங்கே வைக்கும் என்பதை மொத்தமாகச் சொல்லிவிட்டால் தனித்தனி யாகக் கேள்வி கேட்க வேண்டிய அவசியமே இராது என்று நினைக் கிறேன். அந்த விவரத்தைச் சொல்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதலிலேயே நான் 7 பாலி டெக்னிக்குகள் ஏற்படுத்தப்படும் என்று சொன்னேன். எந்த எந்த இடங்கள் என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஏ. எஸ். தக்ஷிணுமூர்த்தி கவுண்டர் : சமையல் துறையில் நளபாகம் என்பதாக ஒன்று இருந்ததாக வரலாற்றில் இருந்து தெரிகிறது. ஒரு நிபுணர் குழுவையாவது நியமித்து—அது என்ன என்பதை ஆராய்ந்து மாணவிகளுக்குச் சொல்லிக் கொடுக்க அரசாங்கம் வகை செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எல்லாவற்றையும் சர்க்காரே செய்ய முடியாது. அந்த நளபாகத்தை அறிந்து—காடரிங் டெக்னலஜி காலேஜில் பிரசங்கம் செய்யும்படியாகக் கனம் அங்கத்தினர் போன்றவர்களே அழைக்கப்படலாம். (சிரிப்பு)

29th March 1965]

திரு. ஏ. ஆறுமுகம் : ஜில்லாவிற்கு ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிப்பது அரசாங்கத்தின் கொள்கை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். இப்போது ஒவ்வொரு ஜில்லாவும் இரண்டு அபிவிருத்திக் கவுன்சில்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு ஜில்லாவிலும்—அபிவிருத்தி வட்டாரக் கவுன்சிலுக்கு 2 பாலி டெக்னிக்குகளை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த வகையில் செய்யப் போவதில்லை. எங்கு எங்கு தொழில்கள் இருக்கின்றன, எங்கு தேவை என்பதை அறிந்துதான் வைக்கப்படும்.

திரு. காஞ்சி மணிமொழியார் : மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தனியார் துறையில் எத்தனை பாலிடெக்னிக்குகள் துவக்கப்பட்டு இருக்கின்றன ? சர்க்கார் துறையில் எவ்வளவு துவக்கப்பட்டு இருக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்மிடத்தில் இப்போது 33 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. இதில் எவ்வளவு தனியார் துறையில் துவக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு விவரம் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தஞ்சை ஜில்லாவில் நாகப் பட்டினத்தில் பாலிடெக்னிக் கட்டிடம் கட்ட அனுமதிக்கப்பட்டது. இப்போது டிசைனை மாற்றிவிட்டார்கள். அதனுல் தாமதமாகி இப்போது செலவு அதிகமாகக் கூடிய நிலையில் உள்ளது. ஆகவே ஜாஸ்தியான தொகையை அனுமதிக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பற்றி ரெப்ரசென்டேஷன் செய்து கொள்ள வேண்டுமே தவிர கேள்வி ரூபத்தில் பதில் சொல்ல முடியாது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சமையல் கலைப் பயிற்சியைப் பொறுத்த வரையில் ஆண்களுக்கும் பெண்களோடு சேர்த்துப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதனுல் தான் முதலிலேயே நாடரிங் டெக்னலஜி காலேஜைச் சென்று பார்த்து வரவேண்டும் என்றேன். அங்கு ஆண்களும், பெண்களும் தான் படிக்கிருர்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தலைவர் அவர்களே, முதலில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விப் பட்டியலில் இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது. ஆனல் ரிவைஸ்டு லிஸ்டில் அந்தக் கேள்வி விடப்பட்டுள்ளது.

கனம் சபாநாயகர் : ஒரு கேள்வி விடப்பட்டிருக்கிறது. unnecessary என்று விடப்பட்டுள்ளது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அந்தக் கேள்வியைப் போட்ட அங்கத்தினரே அது unnecessary என்று சொல்லிவிட்டார்களா ?

MR. SPEAKER : It was decided like that. Further questions may be asked about it afterwards. Questions are over.